## வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனி தொழிற்சாலை - 2015

வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனி தொழிற்சாலையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவின கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. தொழிற்சாலையின் ஆண்டறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் தொழிற்சாலையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி தொழிற்சாலையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக் ஐந்தொகை, வருமான செலவினக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 தொடர்ந்தியங்கும் நிலை

1993 ஆம் ஆண்டில் தனியார்மயப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட இந்த நிறுவனம் 1997 ஆம் ஆண்டில் அரசினால் கையேற்கப்பட்டிருந்ததெனினும், நிதி நெருக்கடி காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2007 ஆம் ஆண்டில் அரசு எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் கல்ஓயா பெருந்தோட்ட தனியார் கம்பனி எனும் பெயருடைய கம்பனியொன்றிற்கு இதன் சொத்துக்களில் ஒரு பகுதி கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனித் தொழிற்சாலை பெயரளவில் நிலவும் நிறுவனமொன்றாகியது. அரச அனுசரனையின் கீழ் 09 ஊழியர்களுக்கு சம்பளம் செலுத்தியவாறு காணப்படும் இந்த நிறுவனம் எதுவித செயற்பாட்டு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாததுடன், துருப்பிடிக்கும் காரணத்தால் நிலவும் சொத்துக்களை பாவனைக்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது. இதன் பிரகாரம் இந்த நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை நிச்சயமற்ற நிலைமையொன்றில் காணப்பட்டது.

### 2.2.2 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

---------------------------------------------------------

ரூபா 225,853,299 கிரயமான ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீதியினுள் உள்ளடக்கப்பட்ட 21 நிலையான சொத்து வகைகளுக்குரிய பெறுமானத்தேய்விடும் அடிப்படை மற்றும் கொள்கைகள் ஆகியன நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிராமையால் பெறுமானத்தேய்வு கணப்பீடுகளின் செம்மைத்தன்மை தொடர்பில் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19

---------------------------------------------------------

வருடாந்தம் ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கீடொன்றை மேற்கொண்டு அது நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டுமெனினும், 2015 ஆம் ஆண்டிற்காக 10 ஊழியர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவிற்காக ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 36

---------------------------------------------------------

நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளரிடமிருந்து கிடைக்க வேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 110,794,557 தொகைக்காக ஐயக்கடன் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40

---------------------------------------------------------

ஹிங்குரான சீனிக் கம்பனிக்குரிய ஹிங்குரானையில் அமைந்துள்ள தொழிற்சாலை, அலுவலகம், உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் காணித்துண்டுகள் என்பன 30 வருடகாலமாக கல்ஓயா பெருந்தோட்ட கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த சொத்துக்களின் பெறுமதியான ரூபா 222 மில்லியன் மற்றும் குத்தகைப் பெறுமதியான ரூபா 294 மில்லியன் உள்ளடங்கலான ரூபா 516 மில்லியன் தொடர்பான தகவல்கள் நிதி நிலைமைக்கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட்டிராததுடன், கல்ஓயா பெருந்தோட்ட தனியார் கம்பனியிடமிருந்து அந்த குத்தகைப் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானங்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல வருடங்களாக நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 18,381,212 தொகையான நிகழத்தக்க கணக்கின் செலவு மீதியினை இனங்கண்டு தீர்ப்பனவு செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்விற்காக சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களுக்குரியதாக முன்னால் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் அவற்றை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் | 417,083,873 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் |
| காப்புறுதி நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டிய பணம் | 1,462,771 | |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர் | 83,742,852 | |
| கட்டிட நிதியம் | 4,862,454 | |
| கடன்பட்டோர் | 20,549,122 | |
| ஏனைய கடன் கடன்பட்டோர் | 5,000,958 | |
| வைப்புக்கள் மற்றும் முற்பண மீதிகள் | 302,016 | |
| நிலையான சொத்துக்கள் | 225,853,299 | பௌதீக மெய்மையாய்வு பதிவேடுகள் |
| நுகர்வுப் பொருள் இருப்பு | 31,297,378 | |

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

கரும்புப் பயிர்ச்செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 82,151,409 தொகையான கடன் 1997 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாதிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிதி விளைவுகள் ரூபா 1,508,406 மிகையொன்றானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 3,895,191 ஆனமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 5,403,597 ஆன அதிகரிப்பொன்றினை காட்டியது. மீளாய்வாண்டிற்கான அமைச்சிடமிருந்தான பெறுவனவுகள் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக ரூபா 3,187,323 இனால் அதிகரித்தமை, சங்கிலிகளை வாடகைக்கு வழங்கியதன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா

5,889,385 தொகையான பணத்தை கணக்கீடு செய்தமை நிதி விளைவுகளில் அதிகரிப்பிற்கு பெருமளவில் தாக்கம் செலுத்தியிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் மிகையொன்றும் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை பற்றாக்குறையொன்றினையும் பெற்றிருந்தது. எவ்வாறெனினும், மீளாய்வாண்டில் அது மிகையொன்றாகியிருந்தது. எவ்வாறெனினும் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஆகியவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் நேர்ப் பெறுமதியயொன்றாக காணப்பட்ட பங்களிப்பானது 2013 ஆம் ஆண்டளவில் மறைப் பெறுமதியொன்றாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது மீண்டும் சாதகமான அதிகரிப்பொன்று ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனிக்குச் சொந்தமான காணியின் அளவு 7465 ஹெக்டேயர்களாக இருந்ததுடன், அவற்றுள் 4917 ஹெக்டேயர்கள் விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், கல்ஓயா சீனிக் கம்பனிக்கு 278 ஹெக்டேயர்களும், கம்பனியின் கட்டுப்பாட்டின் கீழ் 2270 ஹெக்டேயர்களும் காணப்பட்டன. குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளிலிருந்து எதுவித வருமானமும் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை. 1990 ஆம் ஆண்டின் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஹிங்குரானையில் அமைந்துள்ள சீனித் தொழிற்சாலை வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனிக் கம்பனி எனும் சுயாதீனமானதொரு நிறுவனமாக மாறியது. இந்த கம்பனி 1993 ஆம் ஆண்டில் தனியார் மயப்படுத்தப்பட்டிருந்ததுடன், 1996 ஆம் ஆண்டில் நிர்வாகத்தரப்பு இந்தக் கம்பனியை கைவிட்டுச் சென்றிருந்ததுடன், 1997 சனவரி 24 ஆந் திகதிய 959/10 ஆம் இலக்க வர்த்தமானியில் இந்த கம்பனி பொறுப்புக்களுடன் மீண்டும் அரசினால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் எதுவித உற்பத்தி நடவடிக்கைகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) ஹிங்குரான சீனிக் கம்பனிக்குரிய ஹிங்குரானையிலுள்ள சில காணித்துண்டுகள் மற்றும் கொழும்பிலுள்ள சில காணிகள் மற்றும் கட்டிடங்கள் தனியார் கம்பனியொன்றினால் மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டிருந்ததுடன், ஹிங்குரான சீனிக் கம்பனியினாலும் ஹிங்குரானையில் அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்கள் சில ரூபா 280 மில்லியனுக்கு அடகு வைக்கப்பட்டிருந்தன. ஹிங்குரான சீனிக் கம்பனியால் அடகு வைக்கப்பட்டிருந்த சொத்துக்களுக்குரியதாக ரூபா 320 மில்லியன் திறைசேரியால் வங்கிக்கு செலுத்தப்பட்டு அந்த சொத்துக்கள் அரச வளங்கள் மற்றும் முயற்சியாளர் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(இ) ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக்குச் சொந்தமான 277.73 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணி மற்றும் அதற்குரிய தொழிற்சாலைக் கட்டிடங்கள் என்பன 30 வருட குத்தகை அடிப்படையில் கல்ஓயா பெருந்தோட்ட தனியார் கம்பனிக்கு 2007 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காலப்பகுதிக்கான குத்தகை பணம் ரூபா 294 மில்லியன் மற்றும் விலை மதிப்புத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட அசையும் சொத்துக்களின் பெறுமதியான ரூபா 222 மில்லியனுடன் அரச பங்குரிமையானது ரூபா 516 மில்லியன் ஆக இருந்தது. இங்கு குத்தகைப் பெறுமதிக்காக கல்ஓயா பெருந்தோட்டக் கம்பனியுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தமொன்று நிறுவனத்திடம் காணப்படவில்லை.

(ஈ) 2007 யூன் 16 ஆந் திகதி கல்லோயா பெருந்தோட்ட தனியார் கம்பனி தமது உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததெனினும், அந்த கம்பனிக்கு கையளிப்பதற்கான சொத்துக்கள் 2009 ஆம் ஆண்டிலேயே மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அவ்வாறே குத்தகைக்கு வழங்குவதற்குரிய முகாமைத்துவ உடன்படிக்கை மற்றும் பங்குதாரர்களின் உடன்படிக்கை என்பவற்றிற்குப் பதிலாக பொது திறைசேரியானது 2009 ஆம் ஆண்டிலேயே கையொப்பமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் இந்த உடன்படிக்கைகளின் பிரதிகள் ஹிங்குரான சீனிக் கம்பனியிடம் காணப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பொது முகாமையாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படவேண்டும்.

| | **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்குப் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிராமை. |
| (ஆ) | கடன் கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் | மீதிகள் உறுதிப்படுத்தப்படாமை. |
| (இ) | நிலையானச் சொத்துக் கட்டுப்பாடு | நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை இனங்கண்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை |